பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 20 சனிக்கிழமை 06.11.2021 கதிர் 228

## தடை விதித்த இடங்களுக்கு மக்களுடன் சென்ற சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவின் நித்தியவெட்டை, கேவில் பகுதிகளில் விவசாய நிலங்களுக்கு மக்கள் செல்லமுடியாது என்று வன ஜீவராசிகள் திணைக்களத் தினர் தடுக்கும் பகுதிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

☞2

# வடக்கில் மீளவும் இனவாதத்தை தூண்டுவதற்குச் சிலர் முயற்சி!

## யாழில் இராஜாங்க அமைச்சர் விதுர குற்றச்சாட்டு



(இ.கலையமுதன்)

**வடக்கில் மீண்டும் இனவாதம், மதவாதத்தைத் தூண்டி மக்களைக் குழப்பச் சிலர் நினைக்கின்றார்கள். அவர்கள் ஏன் இவ்வாறு செய்கின்றார்கள் என்று தெரியவில்லை.**

**- இவ்வாறு தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

☞2

## அங்கஜன் எம்.பியை சந்தித்தார் செந்தில்



(சாவகச்சேரி நிருபர்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின்

☞2

## நாடாளுமன்றத்தின் செங்கோல் சேதம்!



நாடாளுமன்றத்தின் செங்கோலில் சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிவதாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த காலங்களில் ஏற்பட்ட

☞2

## ஓரணியில் தொழிற்சங்கங்கள்; இருளில் மூழ்குமா இலங்கை?



தேசிய வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிராக, பல தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து, எதிர்வரும் தினங்களில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக எரிபொருள், துறைமுகம் மற்றும் மின்சார ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மின்சாரம், துறைமுகம், எரிபொருள், தேசிய நீர் வழங்கல் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பங்குப்பற்றுதலுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த

☞2

## பயணப் பொதிக்குள் பெண்ணின் சடலம்: படுகொலை என்று விசாரணையில் உறுதி

* அவர் அணிந்திருந்த 8 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மாயம்
* இரு கொலையாளிகளும் அடையாளம்

சப்புகஸ்கந்த பகுதியில் பயணப்பையிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட குடும்பப் பெண், படுகொலை செய்யப்பட்ட பின்னரே வீசப்பட்டுள்ளார் என்பது பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன், கொலையாளிகளையும் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பெண் அணிந்திருந்த சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் காணாமல் போயுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

☞2

## தன் சொந்தக் கட்சியையே அழித்தவர் டியூ குணசேகர

### 'மொட்டு'வின் எம்.பி. பதிலடி



ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவையும், அவரின் அமைச்சரவையையும் கடுமையாக விமர்சித்துள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் டியூ குணசேகர மீது, சரமாரியாக சொற்கணை தொடுத்துள்ளது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி.

'ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அதிகாரமற்ற கைப்பாவை என்பதே எனது கருத்து. சுதந்திரத்துக்குப்

☞2

## தொற்றாளர் அதிகரிப்பு!

### அரசு எச்சரிக்கை

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனை சாதாரண விடயமாக கருதிவிட முடியாது. எனவே, மக்கள் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டால் எதிர்காலத்தில் பாரதூரமான நிலைமை உருவாகும்.

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்

☞2

## இராஜாங்க அமைச்சர் விதுர யாழ். பல்கலைக்கழகத்துக்கு



(இ. கலையமுதன்)

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்டு, பல்கலைக்கழக தொல்லியல்துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இன்று பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது,

☞2

## சிறுவர்கள் மத்தியில் மீண்டும் வேகமாகப் பரவும் கொரோனா

### விசேட வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டு

இலங்கையில் தற்போது சிறார்கள் மத்தியிலும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது என விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரத்தை விடவும் இவ்வாரம் அதிகளவு சிறார்கள் கொரோனாத் தொற்றுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறார்களின் நலன் கருதியே பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில்,

☞2



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஓரணியில் தொழிற்சங்கங்கள்; ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுறுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்ஜன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இதன்படி மின்சார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் பட்சத்தில், நாட்டின் மின்சார விநியோகம் தடைப் படக்கூடும்.

ஏற்கனவே இது தொடர்பில் தகவல்கள் வெளியானமை நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொற்றாளர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது:-

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது. இவ்வாறு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதை சாதாரண விடயமாகக் கருதிவிட முடியாது.

முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி, கைகளைக் கழுவுதல் உட்பட சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றாமையே இதற்குப் பிரதான காரணமாகும். எனவே, சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றுமாறு கோருகின்றோம்.

அத்துடன், நாட்டில் தற்போது பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. வணிக மற்றும் பொருளாதார நடைமுறைகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றாவிட்டால் எதிர்காலத்தில் பாரதூரமான நிலைமை உருவாகக்கூடும். - என்றார்.

## தன் சொந்தக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் உருவான முட்டாள்தனமான அமைச்சரவையே இது. மடத்தனமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன' என்று டியூ குணசேகர அரசு மீது கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

இதற்குப் பதிலடிகொடுக்கும் வகையில் 'மொட்டு' கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மதுரவிதானகே கருத்து வெளியிட்டுள்ளார்.

டியூ குணசேகர என்பவர் பலவீனமான அரசியல் கட்சித் தலைவர். கம்யூனிஸ்ட் கட்சியை அழித்தவர். கோப் குழுவின் தலைவராக இருந்து எதனையும் செய்யவில்லை. அவர் நல்லாட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியவர் - என்றார்.

## சிறுவர்கள் மத்தியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலா செல்லுதல், அநாவசியமான நடமாட்டம் உள்ளிட்ட நடவடிக்கையால் வைரஸ் தொற்று வேகமெடுத்தால் மீண்டும் பாடசாலைகளை மூடவேண்டிய நிலைமையே ஏற்படும். - என்றார்.

## இராஜாங்க அமைச்சர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்லியல்துறை தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டதுடன் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். அதன்பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தொல்லியல்துறையின் அருங்காட்சியகம் மற்றும் தொல்லியல் ஆய்வுகூடத்தையும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பார்வையிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. நிஷாந்தி ஜெயசிங்க, இலங்கை தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க, யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி கே.அருந்தவராஜா, வரலாற்றுத் துறை ஓய்வுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி ப.புஷ்பரட்ணம், கலாநிதி கே. சிற்றம்பலம், கலாநிதி ச.சத்தியசீலன், கலாநிதி செ.கிருஷ்ணராஜா உட்பட விரிவுரையாளர்கள் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் கே. சிவராம், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொல்லியல்துறையினர், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் இலங்கை தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க வால் யாழ். பல்கலைக்கழக நூலகத்திற்கு நூல் ஒன்றும் அன்பளிப்பு செய்யப்பட்டது.

## பயணப் பொதிக்குள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பெண் மாளிகாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவர் என்று நேற்று அடையாளம் காணப்பட்டிருந்தார்.

ராகம போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் அவரது கணவரும் இரண்டு பிள்ளைகளும் சடலத்தை பார்வையிட்டதன் பின்னர் அவர்களால் சடலம் இனங்காணப்பட்டது.

மாளிகாவத்தை, தொடர்மாடி குடியிருப்பில் வசித்துவந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 44 வயதுடைய மொஹமட் ஷாபி பாத்திமா மும்தாஸ் என்ற இந்தப் பெண், கடந்த ஒக்டோபர் 28ஆம் திகதி பிற்பகல் தனது வீட்டிலிருந்து மற்றுமொரு பெண் மற்றும் ஆண் ஒருவருடன் ஓட்டோவில் சென்றுள்ளார். இதனை அவரது உறவினர் ஒருவர் அவதானித்துள்ளார்.

வெளியில் சென்ற தனது மனைவி வீட்டுக்கு வராத காரணத்தால் காணாமல் போன பெண்ணின் கணவன், அப்பெண்ணுடன் இறுதியாக ஓட்டோவில் சென்ற பெண்ணையும் அழைத்துக்கொண்டு கடந்த முதலாம் திகதி புளூமெண்டல் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்திருந்தார்.

புளூமெண்டல் - வோல்ஸ் லேன் பகுதியில் ஓட்டோவிலிருந்து குறித்த பெண் இறங்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண் வட்டித் தொழில் மற்றும் சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்ட பின்னர் அவருடன் ஓட்டோவில் பணித்த இருவரும் (ஓட்டோ சாரதி, பெண்) தலைமறைவாகியுள்ளனர்.

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பயணப் பையிலிருந்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸார் பலகோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்தனர். இப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதைப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலத்தின் மீதான பிரேத பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## வடக்கில் மீளவும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் நேற்று காரைநகருக்கு விஜயம் செய்தபோது அங்கே சிலர் கூறியிருக்கின்றார்கள் அமைச்சர் ஒருவர் வருகின்றார், இங்கே விகாரை கட்டுவதற்காக என்று. இதனால்தான் அங்கே மக்கள் குவிந்திருந்தனர்.

வடக்கில் மீண்டும் இனவாதம், மதவாதத்தைத் தூண்டி சாதாரண மக்களை மீண்டும் பிரச்சினைக்குள்ளாக்கச் சிலர் நினைக்கின்றார்கள்.

நேற்றைய சம்பவத்துக்குப் பின்னால் ஒரு அரசியல் உள்ளது என்பதை நான் உணருகின்றேன்.

மக்களுக்காக அரசியல் செய்யும் அரசியல்வாதிகள், ஏன் மக்களைத் தூண்டிவிடுகின்றார்கள் என்பது தெரியவில்லை - என்றார்.

## நாடாளுமன்றத்தின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியின்மைகளின்போது, இந்தச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று தான் நம்புகிறேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சேதங்களைச் சரி செய்வதற்கான இயலுமை, உள்நாட்டில் கிடையாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தடை விதித்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேரில் சென்று ஆராய்ந்தார்

மருதங்கேணிப் பகுதியில் நித்தியவெட்டை, கேவில் பகுதிகளில் உள்ள தமது விவசாய நிலங்களுக்குச் செல்ல விடாது வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தடைபோடுகின்றனர் என்று அந்த நிலத்தின் உரிமையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதையடுத்து இன்று நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் மற்றும் நில உரிமையாளர்கள் ஆகியோர் அப்பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர். இதன்போது நிலத்தின் உரிமையைத் தக்கவைக்க அடுத்தகட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்ததோடு அது தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் எடுத்துரைத்தார்.

## அங்கஜன் எம்.பியை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உப தலைவர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புதிய வரவு - செலவு திட்டம்

**பல்வேறு நெருக்கடிகளினால் குழப்பத்தின் உச்சியில் தடுமாறும் கோட்டாபய அரசு, அடுத்த வாரத்தில் தனது வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க உள்ளது.**

**பொருளாதார ரீதியிலும், சுகாதார அடிப்படையிலும், தேசிய பாதுகாப்பு மட்டத்திலும் பல்வேறு அழுத்தங்களை எதிர்கொண்டுள்ள அரசு, அவற்றைத் தீர்க்க முடியாது அல்லல்படுகின்றது என்பது கண்கூடு.**

**அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு, அவற்றை இறக்குமதி செய்வதற்கு வேண்டிய அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை, உரம் மற்றும் அவசிய மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்ய வழியற்ற அரசினால் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கடும் எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை, விலைவாசி உச்சத்தைத் தொட்டு இருப்பதால் மக்களின் விரக்தி ஆளும் தரப்புக்கு எதிராக மாறிவரும் சூழல் என்று சமாளிக்கவே முடியாத சிக்கல்களால் திணறுகின்றது இன்றைய ஆட்சிபீடம்.**

**இந்தச் சூழ்நிலையில் தான் வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கப் போகின்றார் புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.**

**நிதி நெருக்கடியைச் சமாளிக்க முடியாது திணறும் அரசு, இந்த உத்தேச வரவு – செலவுத் திட்டத்தில் மக்களை ஏமாற்றும் தந்திரோபாயங்களையே – பொய்களையே – புது திட்டங்களாக முன்வைக்கும் என்று ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நேரத்துடன் கூறிவிட்டார். வழக்கமாக, ஒரு வருடத்துக்கான நிதி திட்டமிடல் அறிக்கையே வரவு – செலவுத் திட்டமாக அறிவிக்கப்படும். அதன்படி முழுமையாக 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட அறிக்கையை இப்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் 2022ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களுக்கான வரவு – செலவுத்திட்டமே இம்முறை சமர்ப்பிக்கப்படும் என்று சில வட்டாரங்களில் தகவல் கசிந்துள்ளது. அது உண்மையானால் சமர்ப்பிக்கப்படுவது ஒரு முழுமையான வரவு – செலவுத்திட்டமாக இருக்காது. அது வெறும் நிதி நிலை அறிக்கையாக மட்டுமே இருக்க முடியும்.**

**இந்த அரசு ஆட்சிக்கு வந்ததும் பல வரிகளை விலக்கி அறிவித்து மாயாஜாலம் காட்டியது. அதைப் பார்த்து – அறிந்து – மக்கள் குதூகலத்தில் மூழ்கினர். ஆனால் அதன்பின் நடந்தவை என்ன? அன்று வரி விதிப்பை விலக்கிய அரசு இன்று விலைவாசி உயர்வு, பொருளாதார இக்கட்டு ஆகியவற்றைக் காரணம் காட்டி அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் கூட கண்மண் தெரியாமல் அதிகரித்து, மக்களிடமிருந்து இரட்டிப்பாகப் பிடுங்குகின்றது. அப்படி பிடுங்கியும் கூட – வகைதொகையின்றி ரூபா நோட்டுக்களைக் கோடி கோடியாக அச்சிட்டுப் புழக்கத்துக்கு விட்டும் கூட – நிலைமை கட்டுப்படுவதாக இல்லை.**

**மோசமான பொருளாதாரக் கொள்கைகள்தான் இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம் என்று பார்த்தால், மறுபுறத்தில் அரசு நிர்வாக சீர்கேடுகள், முட்டாள்தனமான வெளிவிவகாரக் கொள்கை போன்றவையும் கூட சீரழிவுக்குக் காரணமாக உள்ளமை வெளிப்படுகின்றது.**

**நாட்டு வளங்களைக் கண்மூடித்தனமாக விற்றும், கணக்கு வழக்கின்றி வெளிநாட்டுக் கடன்களை வாங்கி தள்ளியும் பொறுப்பற்ற விதத்தில் செயல்படும் இந்த அரசு, வரவு – செலவுத் திட்டத்தில் மட்டும் நல்ல பெயர் எடுப்பதற்காக மக்களை ஏமாற்றும் பொய் வாக்குறுதிகளை தரும் திட்டங்களை அறிவிக்கும் என்பது முன்கூட்டியே எதிர்வு கூறப்படும் விடயமாக உள்ளது.**

**இந்த வரவு – செலவுத் திட்டத்தில் அரசு என்ன மூடி மறைப்பு நாடகங்களை அரங்கேற்றினாலும், மோசமாக உள்ள நாட்டின் பொருளாதார நிலைமைக்கு நாடும், மக்களும், அரசும் விரைவில் முகம் கொடுப்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகவே இருக்கும்.**

# அமெரிக்கா போன்ற திருடர்கள் இங்கு அனைவரும் அல்லராம்!

## இலங்கை விவகாரத்துக்கு சீனா பதிலடி

அனைவரும் தங்களை போன்ற திருடர்கள் என அமெரிக்கா நினைத்துக் கொண்டிருப்பதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை உள்ளடங்கலாக உலக நாடுகள் பலவற்றிலும் சீனா அதன் இராணுவத் தளங்களை நிறுவுவதற்குத் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியிருந்தது. குறிப்பாக இராணுவ மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்து சீனாவினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எச்சரித்திருந்தது.

அத்தோடு சீனா அதன் இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படைகளின் பலத்தை மேலும் வலுப்படுத்திக்கொள்ளும் வகையில் இந்தத் திட்டத்தை கையிலெடுத்துள்ளது என்றும் அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இந்நிலையில் அதற்கு பதிலளித்துள்ள சீனா, ஆப்கானிஸ்தானில் நிறுவப்பட்டிருந்த இராணுவத் தளத்தையும் படையினரையும் அமெரிக்கா நீக்கிக்கொண்டிருந்தாலும் வெளிநாடுகளில் சுமார் 750 தளங்களை அமெரிக்கா வைத்துள்ளது எனக் குற்றம் சாட்டியுள்ளது.

அதுமாத்திரமன்றி கடந்த 2020 ஆம் ஆண்டு வெளியான தரவுகளின் பிரகாரம் வெளிநாடுகளில் அமெரிக்காவால் படைத் தளங்கள் நிறுவப்பட்டிருக்கும் இடங்கள் அடங்கிய உலக வரைபடமொன்றையும் சீனத்தூதரகம் வெளியிட்டுள்ளது.

# முன்னுதாரணமாக இருக்க வேண்டிய சுகாதார அதிகாரிகளே விதிகளை மீறல்

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் வருத்தம்

கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளில் முன்னுதாரணமாக இருக்க வேண்டிய வைத்தியர்கள், சிரேஷ்ட சுகாதார அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் சில சமயங்களில் சுகாதார விதிகளை சாதாரணமாக எடுத்துக் கொள்கின்றமை மிகவும் பரிதாபகரமானது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தையும் மோசமான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்துவதாக அவர் ஊடகங்களிடம் தெரிவித்தார். அத்தகைய நபர்கள் முகக்கவசம்கூட கூட அணியாமல் சமூக ஊடகங்களில் படங்களை வெளியிட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

அத்தகைய நபர்களே சுகாதார விதிகளைப் பின்பற்றவில்லை என்றால், நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என்று சாதாரண மக்கள் நினைக்கலாம் என்றும் இது ஒரு தீவிரமான சூழ்நிலை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சொகுசு காரில் கொண்டு சென்று கொழும்பில் வீசப்பட்டது சடலம்

கடந்த மாதம் 26 ஆம் திகதி காலை வனவாசல பொசன்வத்தை பகுதியில் இருந்து மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் பொலிஸார் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் புதுக்கடை பகுதியைச் சேர்ந்த 40 வயதான மொஹமட் இர்ாத் என அடையாளம் காணப்பட்டுள்ளார். நண்பர்கள் குழுவால் கடத்தப்பட்ட இவர், கிராண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகொலை செய்யப்பட்ட அவர், வனவாசலை பொசோன்வத்தை பகுதிக்கு சொகுசு காரில் கொண்டு செல்லப்படும் காட்சி தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகளை பொலிஸார் வெளியிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், மேலதிக விசாரணைகளை பேலியகொட குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் களனி பிரதேச குற்றத்தடுப்பு பிரிவினர் மேற் கொண்டு வருகின்றனர்.

# தனித்து ஆட்சியமைப்பதற்கு எந்தக் கட்சியாலும் முடியாது!

## மைத்திரி ஆருடம்



நாட்டில் எந்தவொரு கட்சியாலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது எனவும் தனித்துப் பயணிக்க முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பெத்தகம பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

மக்கள் பிரதிநிதிகள் மக்களுடன் இருக்காமையே இன்று நாட்டில் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் வெடிக்கக் காரணமாகும். இன்று நாடு முழுவதிலும் ஆசிரியர்கள், விவசாயிகள் எனப் பலரும் போராட்டங்களை நடத்தி போராட்ட அலையொன்று போல் ஒன்று உருவாகியுள்ளது.

இந்த போராட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளே பொறுப்பு சொல்ல வேண்டும். அவர்கள் மக்கள் மத்தியில் செல்வதில்லை, மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதில்லை.

ஒவ்வொரு கட்சிகளையும் விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார்கள். நாட்டில் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரித்தால் அது மோசமான நிலைமையாகும். பொருள்களின் விலைகள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

பொருள்களின் விலையைக் குறைக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோரியுள்ளோம் எனினும் இதுவரையில் அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

நாம் மாவட்ட ரீதியாகச் சென்று கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



# கிளாஸ்கோ மாநாடு பெருந்தோல்வி கிரெட்டா துன்பெர்க் விமர்சனம்!

கிளாஸ்கோவில் நடைபெற்ற பருவநிலை மாற்ற மாநாடு பெருந்தோல்வி எனக் கூறி, இளம் சுற்றுச் சூழல் ஆர்வலர் கிரெட்டா துன்பெர்க் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். கிளாஸ்கோவில் பருவநிலை மாநாடு நடக்கும் இடத்திற்கு வெளியே சுற்றுச்சூழல் ஆர்வலரான கிரெட்டா துன்பெர்க் ஒரு பேரணியில் பங்கேற்று உரையாற்றுகையில்,

'காலநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் ஒரு வார காலமாக உலகத் தலைவர்கள் வெற்றுப் பேச்சை பேசியுள்ளனர். இந்த மாநாடு படுதோல்வி என்பதை யாருக்கும் சொல்லித் தெரியத் தேவையில்லை. இது ஒரு கண் துடைப்பு மாநாடு.


விஞ்ஞானிகள் காலநிலை மாற்றம் தொடர்பாக அறிவியல் ரீதியாக முன்வைக்கும் உண்மைகளை உலகத் தலைவர்கள் புறந்தள்ள முடியாது. அது போலத் தான் அவர்கள் எங்களையும் புறக்கணிக்க முடியாது. உண்மையில் தலைவர்கள் வழி நடத்துபவர்களாக இல்லை. இப்படித்தான் தலைமை இருக்கிறது என்பது வேதனை' என கூறினார்.

1995ஆம் ஆண்டிலிருந்து காலநிலை மாற்றம் தொடர்பான முதல் உச்சி மாநாடு நடந்து வருகிறது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற வேண்டிய மாநாடு ஒத்திவைக்கப்பட்டதால் இந்த ஆண்டு நடக்கிறது.

உலக அளவில் கார்பன் உமிழ்வு எவ்வாறு இருக்கிறது என்பது குறித்து இந்த மாநாட்டில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதுவரை 5 அறிக்கைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 6ஆவது அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் இந்த மாநாடு பெருந்தோல்வி என சூழலியல் செயற்பாட்டாளரான கிரெட்டா துன்பெர்க் தெரிவித்துள்ளார்.

# சவுதி அரேபியாவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்ய பைடன் ஒப்புதல்!



சவுதி அரேபியாவிற்கு 65 கோடி டொலர்கள் மதிப்பிலான ஆயுதங்களைவிற்பனைசெய்ய, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்நிர்வாகம்ஒப்புதல்அளித்துள்ளது.

வளைகுடா இராச்சியத்துடன் ஜோ பைடன் நிர்வாகத்தின் முதல் பெரிய ஆயுத ஒப்பந்தம் இது வென அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில்,'பென்டகன்தற்போதைய மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள ரியாத்திற்கு உதவும் வகையில் அமெரிக்க வெளியுறவுத்துறை விற்பனைக்கு ஒப்புதல் அளித்தது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இந்த முன்மொழியப்பட்ட விற்பனையானது, மத்திய கிழக்கில் அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய சக்தியாக தொடர்ந்து இருக்கும். நட்பு நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்த உதவுவதன் மூலம் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை மற்றும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பை ஆதரிக்கும்' என்று பென்டகன் தெரிவித்துள்ளது.

ஏமனில் சவுதி அரேபியாவின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அமெரிக்க ஆதரவை நிறுத்துகிறேன் என ஜனாதிபதி ஜோ பைடன் கூறிய சில மாதங்களுக்குப் பிறகு, இந்த விற்பனை வந்துள்ளது.

சவுதி அரேபியா வெளியுறவுத் துறையின் அரசியல்–இராணுவ விவகாரங்களுக்கான பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'கடந்த ஆண்டில்சவுதிஅரேபியாவிற்கு எதிரான எல்லை தாண்டிய தாக்குதல்களின் அதிகரிப்பை நாங்கள் கண்டுள்ளோம்.

சவுதி விமானங்களில்இருந்து அனுப்பப்பட்ட சவுதி ஏவுகணைகள், இந்த தாக்குதல்களை இடைமறிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது அமெரிக்கப் படைகளையும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது மற்றும் இராச்சியத்தில் உள்ள 70,000க்கும் மேற்பட்ட அமெரிக்க குடிமக்கள் ஆபத்தில் உள்ளனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. விற்பனைக்கு காங்கிரஸின் ஒப்புதல் தேவையில்லை. ஆனால், சட்டமியற்றுபவர்கள் செனட் மற்றும் பிரதிநிதிகள் சபையில் ஒரு மறுப்பு சட்டமூலத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஒப்பந்தத்தைத் தடுக்கலாம்.

செப்டெம்பர் மாதம் 50 கோடி டொலர்கள் ஹெலிக்கொப்டர் பராமரிப்பு ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து இந்த விற்பனைக்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

சவுதி அரேபியாவின் விமர்சகர்கள்இந்த ஒப்பந்தத்தை கடுமையாக சாடினார்கள். 'உலகத்தை சிறந்த இடமாக மாற்றுவதற்கும், நமது பாதுகாப்புப் பொருளாதாரத்தைளிபொருளாக்குவதற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை' என்று எழுத்தாளரும்முன்னாள்ஜனாதிபதியுமான மரியன்னே வில்லியம்சன் தெரிவித்தார்.



# முன்னாள் எத்தியோப்பியா இராணுவ வீரர்களை மீண்டும் இணையுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது

கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னாள் இராணுவ வீரர்களைமீண்டும்சேவையில்இணைந்துகொள்ளுமாறு எத்தியோப்பிய இராணுவம் அழைப்பு விடுத்துள்ளது.தைக்ரேமக்கள்விடுதலைமுன்னணி தலைமையில் கிளர்ச்சிப் படைகள் தலைநகர் அடிஸ்அபாபாவை நோக்கி முன்னேறி வருகின்றது.

இந்நிலையில் எத்தியோப்பியாவில் நிலவும் மிகவும் திரவமான பாதுகாப்பு சூழ்நிலைக்கு மத்தியில் விரைவில் அந்நாட்டைவிட்டு வெளியேறுமாறு அமெரிக்கத் தூதரகம் தமது குடிமக்களை கோரியுள்ளது.

இந்த வாரம் அவசரகால நிலையை பிரகடனப்படுத்திய அதிகாரிகள், பொதுமக்கள் ஆயுதங்களைப் பதிவு செய்து தங்கள் சுற்றுப்புறங்களைப் பாதுகாக்கத் தயாராக வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தனர்.

மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து 400,000 க்கும் அதிகமானோர் பஞ்சத்தின் விளிம்பில் உள்ள நிலையில் யுத்தம் இரண்டாம் ஆண்டில் நுழைந்துள்ளது.

இந்நிலையில்மோதல்களைமுடிவுக்குகொண்டு வர அழைப்பு விடுத்துள்ள ஐ.நா. பாதுகாப்பு சபை, ஆபிரிக்க ஒன்றியத்தின் மத்தியஸ்த முயற்சிகளுக்கு தங்கள் ஆதரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

# தாய்வானைப் பாதுகாக்கும் வலிமை எங்களிடம் உள்ளது என்கிறது அமெ.

சீனாவின் இராணுவ நடவடிக்கையிலிருந்து தாய்வானைப் பாதுகாப்பதற்கான முழு வலிமை தங்களுக்கு இருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

தாய்வான் மீது சீனா தாக்குதல் நடத்தினால் அந்தத் தீவுக்கு அமெரிக்கா பாதுகாப்பு அளிக்கும் என அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் சமீபத்தில் கூறியிருந்த நிலையில், அமெரிக்க முப்படைகளின் தலைமைத் தளபதி மார்க் மில்லே இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், 'இன்னும் 24 மாதங்கள் வரை தாய்வான் மீது சீனா இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பில்லை. ஒருவேளை சீனா தாக்குதல் நடத்தினால், அதிலிருந்து தாய்வானை அமெரிக்கா பாதுகாக்குமா என்ற கேள்விக்கே இடமில்லை.

தாய்வானைப் பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையை அமெரிக்கா தொடர்ந்து பின்பற்றி வருகிறது. அந்தத்தீவைசீனாகைப்பற்றமுயன்றால், அதனைத் தடுத்து நிறுத்துவது குறித்து ஜனாதிபதி முடிவெடுப்பார்.

சீனாவிடமிருந்து பாதுகாப்பு வேண்டும் என்று தாய்வான் கேட்டுக்கொண்டால், அந்தத் தீவைப் பாதுகாக்கும் முழு திறனும் அமெரிக்காவுக்கு உள்ளது. இதுமட்டுமன்றி, உலகம் முழுவதும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளும் வலிமையும் அமெரிக்காவுக்கு உள்ளது.

தாய்வான் மீது சீனா தற்போதைக்கு தாக்குதல் நடத்தாது என்றாலும், பிற்காலத்தில் அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதற்கான திறனை சீனா வளர்த்துக்கொண்டு வருகிறது. சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எங்களது விருப்பமாகும்' என கூறினார்.

சீனாவுடன் கடந்த 1949ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டுப் போருக்கு பின்னர், தாய்வான் தனி நாடானது. ஆனால், இதை சீனா ஏற்காமல், தங்களது ஒருங்கிணைந்த பகுதி என்று தொடர்ந்து கூறி வருகிறது. எனினும் தாய்வான், சீனாவின் கட்டுப்பாட்டில் இல்லை. ஜனநாயக முறையிலான அரசாங்கம் தான் அங்கு ஆட்சி அதிகாரத்தில் உள்ளது. இந்தநிலையில் சீனக் கடற்கரையில் இருந்து சுமார் 200 கி.மீ. தொலைவில் உள்ள தாய்வானை, சீனாவுடன் மீண்டும் இணைப்போம் என்று சீன ஜனாதிபதி கூறியுள்ளார். இதனிடையே கடந்த 72 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனாவின் அத்துமீறல்கள் தாய்வானில் பதிவாகியுள்ளன.

எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் தங்கள் நாட்டை சீனா ஆக்கிரமிக்கக் கூடும் என்று தாய்வான் பாதுகாப்புத் துறை அமைச்சர் சியு குவோ–செங்கும் அச்சம் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் வீடு வீடாகச் சென்று தடுப்பூசி அமைச்சர் சுப்பிரமணியன் நேரில் ஆய்வு



தமிழகத்தில் கொரோனாவை கட்டுப் படுத்த வீடு வீடாகச்சென்றுதடுப்பூசிபோடும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள நிலையில், சென்னையில் இன்று அந்தப் பணி உத்தியோகபூர்வமாகத் தொடங் கியது.

சென்னை நொச்சிக்குப்பத்தில் இந்தப் பணியை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்க ளுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், தமிழகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலி னுடைய வழிகாட்டுதலின் பேரில் தடுப்பூசி போடும் பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே அரசு மருத்துவமனைகள், மருத்துவ அமைப்புகளின் வாயிலாக சுமார் 2,800 இடங்களில் தொடர்ந்து தடுப்பூசி போடும் பணிகள் நடைபெறத் தொடங்கின. அதன்பிறகு வாரந்தோறும் மெகா தடுப்பூசி முகாம்களை தொடங்கி இதுவரை 7 தடுப்பூசி முகாம்கள் போடப்பட்டு அவை மிகப்பெரிய அளவில் வெற்றி அடைந்துள்ளன. மாற் றுத்திறனாளிகளுக்கு வீடு தேடிச்சென்று தடுப்பூசி போடும் பணி இந்தியாவிலேயே சென்னை மாநக ராட்சியில்தான் முதன் முதலாக தொடங்கப்பட்டது.

தடுப்பூசி போடும் பணியில் ஒருவரைக் கூட தவற விட்டுவிடக்கூடாது என்ற வகையில் வீடுகள் தோறும் சென்று தடுப்பூசி போடப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார். ஓரிரு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட அந்த திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறி வுறுத்தினார். அந்த வகையில் இன்று தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள் வீடுகள் தோறும் சென்று தடுப்பூசி போடும் பணியினை மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழகத்தில் 2 ஆவது தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டியவர் 65 லட்சத்து 70 ஆயிரத்து395 பேர். கொவேக்சின் 2 ஆவது தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டியவர்கள் 14 லட்சத்து 9 ஆயிரத்து 903 பேரும், கொவிஷீல்ட் 2 ஆவது தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டியவர்கள் 51 லட்சத்து 60 ஆயிரத்து 392 பேரும் ஆவர்.

உலகம் முழுவதும் 10 க்கும் மேற்பட்ட நாடுகளில் தினமும் 30 ஆயிரத்தை கடந்த அளவில் தொற்று எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் நேற்று 75 ஆயிரத்தை கடந்து இருக்கிறது. ரஷ்யாவில் 40 ஆயிரத்தையும் இங்கிலாந்தில் 36 ஆயிரத்தையும் கடந்து இருக்கிறது. சிங்கப்பூரில் 3 ஆயிரத்தை கடந்து இருக்கிறது. உலக அளவில் பெரிய அச்சுறுத்தல் தொடர்ந்து வருகிறது. இந்த சூழ்நிலையில் தடுப்பூசி போட்டுக்கொள்வது மிக மிக அவசியமான ஒன்று. எனவே அனைவரும் தடுப்பூசி போட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டு இருக்கிறது.

வீடு தேடி மருத்துவம் திட்டத்திற்கு மத்திய அரசும் உறுதுணையாக இருக்கிறது. பொதுமக்கள் அனை வரும் தவறாமல் தடுப்பூசியை போட்டுக்கொள்ள வேண்டும். தடுப்பூசி போட்டவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதில் உள்ள குளறுபடியை சரி செய்ய சம் பந்தப்பட்டதுறைஅதிகாரிகளுக்குஅறிவுறுத்தியுள்ளோம். தவறு தெரிந்து நடந்ததா? தெரியாமல் நடந்ததா? என்பதையும் கண்டறிய வலியுறுத்தியிருக்கிறோம், என்று தெரிவித்துள்ளார்.

## பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு; விலையுயர்வுகளுக்கு ராகுல் விமர்சனம்



பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறார். சமீபத்தில் பெற்றோல், டீசல் மீதான கலால் வரியை இந்திய மத்திய அரசு குறைத்தது. இதேபோல் மாநில அரசுகளும் வற் வரியை குறைக்க வேண்டும் என கேட்டுக்கொண் டது. அதன்படி பல மாநிலங்கள் வற் வரியை குறைத்துள்ளதால் பெற்றோல், டீசல் விலை குறைந் துள்ளது.

இந்த நிலையில், சமையல் எரி வாயு விலை தொடர்ந்து உச்சத்தில் உள்ளதை சுட்டிக்காட்டிய ராகுல் காந்தி, மத்திய அரசை கடுமையாக சாடியுள்ளார். எரிவாயு விலை உயர்வு காரணமாக கிராமப்புறங்க ளில் 42 சதவீத மக்கள் சமையல் எரிவாயு பயன்படுத்துவதை நிறுத்தி விட்டு விறகு அடுப்புக்கு திரும்பியிருக் கின்றனர் என வெளியான செய்தி யின் படங்களை ராகுல் காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்து, தனது கருத்தை பதிவிட்டுள்ளார்.

'வளர்ச்சி என்ற சொல்லில் இருந்து பல மைல்கள் தொலைவில் உள்ளோம். லட்சக்கணக்கான குடும்பங்கள் இப்போது விறகு அடுப்பைபயன்படுத்தும்கட்டாயத்தில் உள்ளன. மோடியின் வளர்ச்சி வாக னம் ரிவர்ஸ் கியரில் உள்ளது. அதன் பிரேக்குகளும் செயலிழந்துவிட்டன' என ராகுல் கூறி உள்ளார்.

## இலவச அரிசி, கோதுமை வழங்கும் திட்டம் நவம்பர் 30க்குப் பின்னர் நீடிக்கப்படாது




கொரோனா வைரஸ் பரவலை கருத்தில் கொண்டு ஏழைகளின் உணவு தேவையை பூர்த்தி செய்ய இந்தியப் பிரதமரின் வழிகாட் டலில் கரீப் கல்யாண் திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது.

நாடுமுழுவதும்கடந்தஆண்டுமார்ச்மாதம் 24 ஆம் திகதி நள்ளிரவு முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. மார்ச் 26 ஆம் திகதி மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பத்தி ரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது, பிரதமரின் கரீப் கல்யாண் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான நிவாரணத் திட்டத்தை அறிவித் தார். இதன் மூலம் நாடு முழுவதும் 80 கோடி பேருக்கு நிவாரணக் கடைகள் மூலம் இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட ஆரம்பித்தது.

மானிய விலை உணவு தானியத்துக்கு மேல் ஒவ்வொருவருக்கும் கூடுதலாக 5 கிலோ உணவு தானியம் இலவசமாக வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் வரை மட்டும் இலவச உணவு தானியம் வழங்குவதாக அறிவிக்கப்பட்ட இத்திட்டம், தொடர்ந்து நீடிக்கப்பட்டுவந்தது. இந்தநிலையில், இலவச உணவு தானியங் கள் வழங்கும் பணி நவம்பர் 30 ஆம் திகதி யுடன் முடிவடைகிறது என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக, மத்திய உணவுத்துறை செயலாளர் சுதன்சு பாண்டே கூறுகையில், 'தற்போது பொருளா தாரம் மீண்டு வருகிறது. வெளிச்சந்தையில் தாராளமாக கிடைக்கும் அளவுக்கு உணவு தானியங்கள் புழக்கம் நன்றாக உள்ளது. எனவே நவம்பர் 30 ஆம் திகதிக்குப் பிறகு இலவச உணவு தானியம் வழங்கும் பணி நீடிக்கப்படாது' என தெரிவித்தார்.



## டெல்லியில் காற்றின் தரம் மிகவும் மோசம் தீபாவளியின் தாக்கமென தரவுகள் தெரிவிப்பு

தீபாவளிக் கொண்டாட்டங்களுக்கு பிறகு இந்தி யாவின் பல்வேறு நகரங்களில் காற்று மாசு அதி கரித்துள்ளது. இந்தியாவின் தலைநகர் டெல்லியில் தீபாவளி தொடங்குவதற்கு முன்பே காற்றின் தரம் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றது. தீபாவளிக்கு பிறகு இன்று காலை 6 மணி நிலைவரப்படி, டெல்லியின் ஒட்டு மொத்த காற்றின் தரம் தொடர்ந்து மோசமான நிலையில் உள்ளது என்றும், காற்றின் தரக் குறியீடு 533 ஆக உள்ளதாகவும் காற்றின் தரம் மற்றும் வானிலை முன்னறி விப்பு மையம் தெரிவித்துள்ளது.

டெல்லியை ஒட்டி உள்ள நொய்டா, குருகிராம், காசி- யாபாத் மற்றும் கிரேட்டர் நொய்டாவிலும் காற்று மாசு அதிகமாக இருந்தது. நாளை மாலை முதல் காற்றின் தரம் ஓரளவு மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தீபாவளி முடிந்து 2 நாள்கள் ஆகியும் டெல்லி மற்றும் டெல்லியை சுற்றி உள்ள நகரங்கள் புகை மூட்டத்தால் சூழப்பட்டுள்ளன. இதனால் வாகனங்களை செலுத்திச் செல்வது கடும் சிரமமாக உள்ளது.

காற்றின் தரத்தை பொறுத்தவரை தரக்குறியீடு 50 இருந்தால் நல்லது என்றும், 50 முதல் 100க்குள் இருந்தால் திருப்திகரமானது என்றும், 101 முதல் 200 க்குள் இருந்தால் மிதமானது என்றும், 201 இல் இருந்து 300இற்குள் இருந்தால் மோசமானது என்றும் 301 இல் இருந்து 400 க்குள் இருந்தால் மிக மோசமானது என்றும், 401 இல் இருந்து 500க்குள் இருந்தால் கடுமை யானது எனவும் அளவிடப்படுகிறது.

## ஆப்கான் சூழல் தொடர்பான கூட்டத்தில் பாகிஸ்தான் பங்கேற்காமைக்கு கண்டனம்

ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பாகிஸ்தான் பங்கேற்காததற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆப்கானில் தற்போது நிலவும் சூழல் குறித்து ஆலோ சனை நடத்துவதற்காக தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மட்டத்திலான கூட்டத்துக்கு இந்தியா ஏற்பாடு செய்துள்ளது. வரும் 10 ஆம் திகதி இக்கூட்டம் நடை பெறவுள்ளது. இதில் பங்கேற்குமாறு சீனா, பாகிஸ்தான் மற் றும் மத்திய ஆசிய நாடுகளுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

ஆனால் கூட்டத்தில் பங்கேற்க பாகிஸ்தான் மறுத் துள்ளது. இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள இந்தியா, பாகிஸ்தான் புறக்கணிக்க முடிவு செய்திருப்பது துரதி ருஷ்டவசமானது என்றும் இது ஆச்சரியமளிக்கும் முடிவு அல்ல என்றும் கூறியுள்ளது.

# பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் புலமைப்பரிசில் திட்டம் வழங்கல்

கிழக்குமாகாணத்திலிருந்துபல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பொருளாதார உதவி தேவைப்படும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம், கடந்த 2012 ஆண்டு தொடக்கம் சங்காரவேல் பவுண்டேசன் அமைப்பினரின் ஒழுங்கமைப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டுவருகின்றது. இதுவரை இப்புலமைப் பரிசில் திட்டத்தினூடாக 84 மாணவர்கள்உள்வாங்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 18 மருத்துவத்துறை மாணவர்களும், 36 பொறியியல்துறை மாணவர்களும், 20 சட்டத்துறை மாணவர்களும், ஏனைய விசேட துறைகளுக்காக 10 மாணவர்களும் உள்ளடங்குகின்றார்கள்.



இவர்களில்தங்களதுபல்கலைக்கழக கல்வியை முடித்து மருத்துவர்களாக ஒருவரும், பொறியியலாளர்களாக 12 பேரும், சட்டத்துறையில் பூர்த்தி செய்த 05 பேரும், விசேட துறை பட்டதாரிகளாக 05பேருமாகமொத்தம்23பேர்தங்களது பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்தி செய்துள்ளனர். இவர்களில் மருத்துவம், பொறியியல் துறை கல்வியை மேற்கொண்ட அனைவரும் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளதுடன் அகில இலங்கைப் பொறியியல் சேவைப் போட்டிப் பரீட்சையில் மூவர் தெரிவாகி அரச சேவைப் பொறியியல் துறைக்கு உள்வாங்கப்பட்டு பெருமை சேர்த்துள்ளனர். ஏனைய துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களில் இருவர் விரிவுரையாளர்களாகவும் ஏனையோர் மேற்படிப்புகளிலும் ஈடுபட்டுள்ளனர். சட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த 5 மாணவர்களும் சட்டத்தரணியாவதற்குரிய கற்கையைகொழும்புபல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார்கள்.

புலமைப் பரிசில் கொடுப்பனவாக மருத்துவத் துறைக்கு மாதாந்தம் 8,000 ரூபாவும், பொறியியல், சட்டம் ஆகிய துறைகளுக்கு மாதாந்தம் 7,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது. இத்தொகையானது அவர்களது பல்கலைக்கழக கல்வி நிறைவு பெறும் வரை நடைமுறைப்படுத்தப்படுவதை நன்கொடையாளர்கள் உறுதி செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இச்செயற்பாட்டிற்கு இணைப்பாளர்களாக சங்காரவேல் பவுண்டேசன் அமைப்பினர் செயற்படுகின்றனர்.

இவ்வருடத்திற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் எதிர்வரும் 20.12.2021 ஆம் திகதிக்கு முன்பாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மட்டுப்படுத்தப்பட்ட அளவு புலமைப்பரிசில்களே வழங்கப்படுவதனால் பொருளாதார உதவி அதிகம் தேவைப்படுபவர்கள் முன்னுரிமைப் படுத்தப்படுவார்கள் என சோ. சிவலிங்கம், (ஓய்வுநிலை விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர்), அறிவித்துள்ளார் மேற்படி விண்ணப்பங்களை இந்த முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் கோருகிறார். தலைவர், சங்காரவேல் பவுண்டேசன், இல. 186, புதிய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு.



## கல்முனை பிரதேசத்தில் களிகம்பு நிகழ்வு

கல்முனைப் பிரதேச செயலக கலாசார அதிகாரசபையின் ஏற்பாட்டில் கல்முனைக்குடி கடற்கரை மைதானத்தில் களிகம்பு பயிற்சியும் அரங்கேற்றமும் நேற்று நடைபெற்றது.

தெலஸ் மகோ பகன தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கலாச்சார அலுவல்கள் திணைக்களமும், மாவட்ட செயலகமும் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்தனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி அவர்களும்,கௌரவ அதிதிகளாக கல்முனை சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர். எம்.சாலீஹ்,அம்பாறை மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் டி.எம்.றிம்சான்,கல்முனைக்குடி சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் எஸ்.எல். எம்.அஸீஸ், கலாச்சார உத்தியோகத்தர் எம்.எஸ். பௌசுல் ஹிபானா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம்களின் பாரம்பரிய நிகழ்ச்சிகளில் ஒன்றான களிகப்பு(பொல்லாடி) நிகழ்வு நீண்ட நாள்களின் பிறகு திறந்த வெளியில் நடைபெற்றமையால் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி அதிகளவான பொதுமக்கள் கண்டுகளித்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது

## விபச்சார விடுதியொன்று கல்குடாவில் முற்றுகை

கல்குடா பொலிஸ் பிரிவில் ஆயுர்வேத மசாஜ் நிலையத்தின் பெயரில் இயங்கி வந்த விபச்சார விடுதியினை முற்றுகையிட்ட போது மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தன விதானகே தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்ஹவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு குற்ற விசாரணை பிரிவினர் மற்றும் கல்குடா பொலிஸார் இணைந்து நேற்று மாலை ஆயுர்வேத மசாஜ் நிலையத்தினை முற்றுகையிட்ட போது அங்கிருந்த மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அவிசாவளை மற்றும் பொலன்னறுவை பகுதியினைச் சேர்ந்த 21, 33, 38 வயதுடைய பெண்கள் என தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எச்.எம்.எம்.பஸீல் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 19ஆம் திகதி வரை சமூகநோய் தொடர்பான அறிக்கை பெறுவதற்காக தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார் எனகல்குடாபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தன விதானகே தெரிவித்தார்.






## அம்பாறை மாவட்டத்தில் விழிப்புணர்வு பேரணி

மருதமுனை றைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கிளப் ஏற்பாடு செய்த 'வீதி விபத்துக்களை தவிர்ப்போம்' எனும் தலைப்பில் அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த மாபெரும் சைக்கிள் விழிப்புணர்வு பேரணி இன்று சனிக்கிழமை காலை மருதுமுனை பிரதான வீதியில் ஆரம்பமாகி பொத்துவில் வரை சுமார் 150 கிலோ மீற்றர் தூரம் சென்றது.

இதில் வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், கல்வியதிகாரிகள், புத்திஜீவிகள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# இலங்கைத் தொடருக்கான மேற்கிந்திய டெஸ்ட் அணி விவரம் அறிவிக்கப்பட்டது



இம்மாதம் 10 ஆம் திகதி இலங்கை வரும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி, சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் அங்கமாக இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணியுடன் விளையாடவுள்ளது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரினை அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இலங்கை அணிகள் விளையாடும் இந்த இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் பங்கெடுக்கவிருக்கும் 15 பேர் கொண்ட தமது வீரர்கள் குழாத்தினை மேற்கிந்தியத் தீவுகள் அறிவித்துள்ளது.

இந்த மேற்கிந்தியத் தீவுகள் டெஸ்ட் அணியில் அறிமுக வீரராக இடதுகை துடுப்பாட்டவீரர் ஜெரேமி சோலோசனோ இணைக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் மேற்கிந்திய தீவுகளின் ஏ அணிக்காக ஆடியிருக்கும் ஜெரேமி, மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை ஒழுங்கு செய்த தெரிவுப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியதை அடுத்து இந்த வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்.

கிரெய்க் ப்ரத்வைட் தலைமையிலான இந்த மேற்கிந்திய தீவுகள் அணியில் இப்போது ரி20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிவருகின்ற ரொஸ்டன் சேஸ், ஜேசன் ஹோல்டர் போன்ற சகலதுறை வீரர்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையுடனான டெஸ்ட் தொடருக்கு முன்னர் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறும் மூன்று நாள்கள் கொண்ட பயிற்சிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி விளையாடவுள்ளது. டெஸ்ட் தொடரின் போட்டிகள் இரண்டும் காலி சர்வதேச மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

மேற்கிந்தியத் தீவுகள் அணி விவரம்

கிரெய்க் ப்ரத்வைட் (அணித்தலைவர்), ஜெர்மைன் பிளக்வூட் (உப தலைவர்), ஷக்ருமா போனர், ரொஸ்டன் சேஸ், ரகீம் கோர்ன்வால், ஜோசுவா த சில்வா, னோன் கப்ரியல், ஜேசன் ஹோல்டர், ஷாய் ஹோப், கைல் மேயர்ஸ், வீரசம்மி பர்மோல், கேமர் ரோச், ஜெய்டன் சீல்ஸ், ஜெரேமி சோலசனோ, ஜோமெல் வொரிகன்

# ஸ்கொட்லாந்தை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி!




ரி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில், சூப்பர் - 12 சுற்றின் நேற்றைய இரண்டாவது போட்டியில், இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் ஸ்கொட்லாந்து அணியை இலகுவாகவெற்றிபெற்றுள்ளது.

குழு 2 இற்கான இந்தப் போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ள முடிவெடுத்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஸ்கொட்லாந்து அணி, 17.4 ஓவர்களில் 85 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. முன்சே 24 ஓட்டங்களையும் லீஸ்க் 21 ஓட்டங்களையும் பெற்றனர். இந்திய அணியின் மொஹமட் ஷமி மற்றும் ஜடேஜா இருவரும் தலா 3 விக்கெட்டுக் களையும் பும்ரா 2 விக் கெட்டுக்களையும் அஸ்வின் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 86 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி, 6.3 ஓவர்களிலேயே 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. கே.எல். ராகுல் 50 ஓட்டங்களையும் ரோஹித் சர்மா 30 ஓட்டங்களையும் எடுத்தனர். ஸ்கொட்லாந்து அணியின் மார்க் வாட் மற்றும் பிரட் வீல் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் ரவீந்திர ஜடேஜா தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியோடு குழு 2 இல் மூன்றாமிடத்துக்கு முன்னேறிய இந்திய அணி, நாளை நடைபெறும் ஆப்கானிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியின் முடிவைப்பொறுத்து அரையிறுதியில் நுழைவதற்கான தனது வாய்ப்பினைத் தக்கவைக்கும்.

# ரி—20 உலகக் கிண்ணத் தொடரில் சாதனை படைத்தார் ஹசரங்க

ஒரு ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையை இலங்கையின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் வனிந்து ஹசரங்க தனதாக்கிக்கொண்டுள்ளார்.

சூப்பர் 12 சுற்றின் தனது இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான மேற்கிந்தியத் தீவுகளை 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இலங்கையணி, புள்ளிகளின் அடிப்படையில் தொடரிலிருந்த வெளியேற நேர்ந்தது.



இந்தப் போட்டியிலும் பந்துவீச்சில் கலக்கிய வனிந்து ஹசரங்க, 4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன்மூலம் இம்முறை ரி-20 உலகக் கிண்ணத்தின் தகுதிகாண் சுற்று உட்பட 8 போட்டிகளில் மொத்தமாக 16 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி, அஜந்த மெண்டிஸ் வசமிருந்த சாதனையைக் கடந்து வனிந்து ஹசரங்க முன்னிலை பெற்றார்.

முன்னதாக, அஜந்த மெண்டிஸ் 2012 இல் இலங்கையில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் 15 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஒரு ரி-20 உலகக் கிண்ணத்தில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையைத் தன்வசப்படுத்தியிருந்தார். இதேவேளை, சர்வதேச கிரிக்கெட் சபையின் அண்மைய தரப்படுத்தல் வரிசையில் ஆண்களுக்கான ரி-20 பந்துவீச்சாளர்களில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ள வனிந்து ஹசரங்க, தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் ஹட்ரிக் சாதனையையும் படைத்தார்.

அதுமாத்திரமன்றி, இந்த ஆண்டில் நடைபெற்ற ரி-20 போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை (36) வீழ்த்திய பந்துவீச்சாளராகவும் வனிந்து ஹசரங்க இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# நமீபியாவை இலகுவாக வீழ்த்தி நியூசிலாந்து அணி வென்றது

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய நாளின் முதலாவது போட்டியில், நியூசிலாந்து - நமீபியா அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன. சூப்பர் - 12 சுற்றின் குழு 2 க்கான இந்தப் போட்டியில் நியூசிலாந்து அணி 52 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நமீபிய அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 163 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

க்ளென் பிலிப்ஸ் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் ஜேம்ஸ் நீஷம் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும் எடுத்தனர். நமீபிய அணியின் எரஸ் மஸ், வீஸே மற்றும் பேனார்ட் மூவரும் ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 164 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய நமீபிய அணியால், 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து,

111 ஓட்டங்களை மட்டுமே பெற முடிய, நியூசிலாந்து அணி 52 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மைக்கேல் வன் லிங்கென் 25 ஓட்டங்களையும் னே க்ரீன் 23 ஓட்டங்களையும் எடுத்தனர். நியூசிலாந்து அணியின் டிம் சவுத்தி, ட்ரெண்ட் போல்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மிட்செல் சான்ட்னர், ஜேம்ஸ் நீஷம் மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணியின் ஜேம்ஸ் நீஷம் தெரிவுசெய்யப்பட்டார்.

சூப்பர் - 12 சுற்றில் 4 போட்டிகளில் விளையாடி, 3 இல் வெற்றிபெற்றிருக்கும் நியூசிலாந்து அணி 6 புள்ளிகளோடு குழு 2 இல் இரண்டாமிடத்திலுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இயங்கு நிலையில் தன்னை காட்ட முயல்கின்றது அரசு!

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு







அநாதைகளாக உள்ள எங்களுக்கான அரசியல் தீர்வைப்பெற்றுகொள்வதற்குப்பல்வேறுமுயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம் என நாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம்சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அலுவலகமான அறிவகத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் அதிகமான பட்டினியை நோக்கி இந்த நாடு நகரப் போகிறது என்பதை இந்த நாட்டினுடைய குடும்ப அரசியலில் அங்கத்தவராக இருக்கின்ற சமல் ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

நீங்கள் சோறு இல்லை என்றால் மரவள்ளிக்கிழங்கைச்சாப்பிடுங்கள் என்று கடந்த 60 ஆண்டுகளுக்கு முற்பட்ட வார்த்தைகளை, 70 ஆண்டு காலப்பகுதியில் நடந்த சம்பவங்களை மீண்டும் அவர் நினைவூட்டி இருக்கிறார். ஆகவே எவ்வளவு தூரம் உலகம் வளர்ந்திருக்கிறது, நாகரிகம் வளர்ந்திருக்கிறது. நாடுகளினுடைய பொருளாதாரம் வளர்ந்து இருக்கிறது. ஆனால் இலங்கையில் மட்டும் மக்களை வதைக்கின்ற – மக்களுக்கு விரோதமான – செயற்பாடுகளைஅரசாங்கம்செய்துகொண்டிருக்கிறது.

பொருளாதாரத் தோல்வியின் விளிம்பில் உள்ள இந்த அரசாங்கம் தன்னை இயங்கும் நிலையில் உள்ளது போன்று காட்டவே தொடர்ந்தும் முயல்கின்றது.

அரசியல் உரிமைக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றோம். எங்களது உரிமைக்காகத் தொடர்ந்தும் நாங்கள் இந்த பேரினவாத அரசுடன் பல்வேறு வழிகளிலும் போராடி வருகிறோம்.

அநாதைகளாக விடப்பட்டிருக்கின்ற எமக்கான அரசியல் உரிமைக்கான போராட்டத்தில் நாங்கள் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மூன்று பிள்ளைகளின் தாய் திருகோணமலையில் கைது

திருகோணமலை – கன்னியா, மாங்காயூற்று பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று பிள்ளைகளின் தாயொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து குறித்த பெண்ணை சோதனையிட்ட போது 20.7 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் 38 வயதுடைய அதே பகுதியைச் சேர்ந்த மூன்றுபிள்ளைகளின்தாயொருவரேகைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் எனவும், அவரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலிட்டது சீனா; அத்தியாவசிய பொருள் இறக்குமதியில் சிக்கல்

மக்கள் வங்கியை சீனா கறுப்பு பட்டியலிட்டதால் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கியை சீனா மட்டும் கறுப்புப் பட்டியலிட்டுள்ள நிலையில், சர்வதேச நிறுவனங்கள் இலங்கையின் ஒட்டுமொத்த வங்கிக் கட்டமைப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

குறிப்பாக அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதங்கள் விநியோகம் செய்யப்படும்போது நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

இலகு தவணை முறையில் இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு பணம் செலுத்துவதற்கு முடியாத நிலை உருவாகியுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஆசிய நிறுவனங்கள் இலங்கையுடன் கொடுக்கல் வாங்கல் செய்ய அச்சம் வெளியிட்டுள்ளன.

மக்கள் வங்கி கறுப்பு பட்டியலில் இடப்பட்டுள்ளமையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், அவ்வாறு செய்தால் சர்வதேச நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்வது இலகுவாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருந்த சேதன உரம் தொடர்பான பிரச்சினையால் மக்கள் வங்கியை சீனா கறுப்பு பட்டியலிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யுத்தம் பாதித்த மக்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## எரான் விக்ரமரத்ன கோரிக்கை



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டைப் பெற்றுக் கொடுக்க, எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்ட, காணாமல் போனோர் அலுவலகத்தால் ஓரளவு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே அதனை விரைவுபடுத்தி இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் முன்கொண்டு செல்ல வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இழப்பீடுகளை வழங்க அமைக்கப்பட்ட இழப்பீடு அலுவலகத்துக்கு அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சொற்ப நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது என எரான் விக்ரமரத்ன சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் வடக்கிலோ தெற்கிலோ யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமொன்றை வழங்க புதிய நிதியமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எரான் விக்ரமரத்ன கேட்டுக்கொண்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.11.2021இல் வெளியிடப்பெற்றது.